
386

எண். 43

386/இ.59

# திருவையாற்றுத் தலவரலாறு



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JUN 1959
MADRAS

O23:3F.21193.Ty
N41-5
109941

திருக்கோபுரம்

தருமபுர ஆதீனம்

0-37 NP



தருமபுர ஆதீனம் 25 ஆவது மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

# திருவையாற்றுத் தலவரலாறு

இஃது

இவ்வாலய பாரம்பரைத் தருமகர்த்தா

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்களின்

திருவுள்ளக் குறிப்பின்படி

திருவையாறு
ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி தேவஸ்தானத்தில்
வெளியிடப்பெற்றது.


1958

முதற் பதிப்பு 1941.
இரண்டாவது பதிப்பு 1943.
மூன்ருவது பதிப்பு 1948.
நான்காவது பதிப்பு 1954.
ஐந்தாவது பதிப்பு 1958.

NADU ARCHIVES LIBRARY
109941
EGMORE, MADRAS

Q23:38.21193.TY
N41-5

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.




அகத்தோற்றம்

உ

சிவமயம்

# திருவையாற்றுத் தல வரலாறு

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடும் ஐயாறன் அடித்தலமே.

## 1. தலமும் பெயர்களும்


பூந்தண்பொன்னி எந்நாளும் பொய்யா தளிக்கும் புனல் நாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களுள் இதுவும் ஒன்று. தஞ்சையிலிருந்து வடக்கே 8 கல் தொலைவில் உளது. இத்தலம் ஐயாறு, பஞ்சநதம், ஜப்பேசுரம், பூலோக கயிலாயம், காவிரிக்கோட்டம் என்னும் பல பெயர்களையுடையது.

## 2. கோயிலமைப்பு


திருவீதிகளுள்ளிட்டு ஐந்து பிராகாரங்களை யுடையது. சுவாமிக்கும் அம்மைக்கும் தனித்தனி கோயில்கள் உள்ளன. இரண்டும் கிழக்கு நோக்கிய

சந்நிதிகளே. சுவாமி கோயில் முதற்பிராகாரத்தில் எழுந்தருளியுள்ள தக்ஷிணுமூர்த்தம் மிக்க சிறப்புடையது. இந்தச் சுற்றிலேயே எல்லாப் பரிவார மூர்த்தங்களும், உமாமகேசுவரர், சங்கரநாராயணர், பிரமதேவர், திரிபுரசுந்தரி முதலிய மூர்த்தங்களும் எழுந்தருளி யிருக்கின்றன. இரண்டாம் பிராகாரத்தில் சோமாஸ்கந்தருக்குத் தனி ஆலயம் அமைந்திருக்கின்றது. இதற்கு அணிமையில் மேல்பால் ஜப்பேசுர மண்டபம் இருக்கிறது. இங்குப் பஞ்சபூத லிங்கங்களும், சப்தமாதர்களும், ஆதிவிநாயகரும், நவக்கிரகங்களும் எழுந்தருளியுள்ளார்கள். நவக்கிரகங்கள் ஆகமவிதிப்படி இங்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. இச்சுற்றின் திருமதில்களில் புராண ஐதிகமுள்ள பழங்காலச் சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இச்சுற்றிலும் விநாயகர், சுப்பிரமணியர், சோமாஸ்கந்தர், தக்ஷிணுமூர்த்தி, நடராஜர், சப்தஸ்தல மூர்த்தங்கள் முதலிய திருவுருவங்கள் பிரதிஷ்டையாகி இருக்கின்றன.


மூன்றும் பிராகாரத்தில் ஆஸ்தான மண்டபம், சைவசமயப் பிரசங்கசபா மண்டபம், யாகசாலே, மடைப்பள்ளி இவைகள் அமைந்திருக்கின்றன. இப்பிராகாரத்தில் கிழக்கிலும் தெற்கிலும் இருகோபுரங்கள் உள்ளன. ஸ்ரீ கயிலாயத்தில் இறைவன் தெற்கு வாயிலால்தான் அருள்புரிய வருவார் என்பதைப் போன்றே பூலோக கயிலாயமாகிய இங்கும் தெற்குக் கோபுரவாயில் வழியாக இறைவன் உற்சவ காலங்களில்



திருமாளிகைப்பத்தி



சுவாமி விமானம்



திருக்கோபுரம்

வீதியுலாவிற்கு எழுந்தருளுவார். நான்காந் திருச் சுற்றில் தெற்குப் பிராகாரத்தில் **சூரியபுஷ்கரிணி** என்னும் திருக்குளமும், அப்பர் கயிலையைக்கண்டு தரிசித்த **தக்ஷிணகயிலாயம்** என்னும் திருக்கோயிலும், வடக்கில் **வடகயிலாயம்** என்னும் [1]ஒலோகமாதேவீச் சரமும் அமைந்துள்ளன. இச்சுற்றில் கிழக்கு, தெற்கு, மேற்கு மூவிடங்களிலும் கோபுரங்கள் அமைந்துள்ளன. தென் கோபுரவாயிலில் ஆட்கொண்டார் சந்நிதி இருக் கிறது. சுவாமி கோவிலுக்கு ஈசான திக்கில் அம்பிகை கோயில் அமைந்திருக்கிறது. இதற்கும் இரண்டு சுற்றுக்கள் உள. சுவாமி சந்நிதியிலும் அம்பிகையார் சந்நிதியிலும் தனித்தனி ராஜகோபுரங்கள் உள்ளன.

## 3. மூர்த்திகள்

சுவாமி சுயம்பு மூர்த்தம். சுவாமிக்கு ஐயாறப்பர் **செம்பொற்சோதியார்** [2]**ஜெப்பேசர், கயிலாயநாதர் பிரணதார்த்திஹரர்** எனப் பல திருநாமங்கள் வழங்கப் பெறும். அம்மையார் **அறம்வளர்த்தநாயகி, திரிபுர சுந்தரி, தருமாம்பிகை,** என்னும் திருநாமங்களுடன் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிறார். ஓலமிட்ட **விநாயகர்,** ஆதி **விநாயகர்,** **வல்லப விநாயகர்** எனப் பல கணபதி மூர்த்தங்களும் உள்ளன.

---

[1] இச்சொல் இப்படியே கல்வெட்டில் உள்ளது.

[2] இத்திருப்பெயருக்கேற்ப இலிங்கம் சோதியுருவில் (மிருத்திகையால்) அமைந்துள்ளது.


முருகப்பிரான் வில், வேல், அம்பு ஆகிய படைக்கலங்களைத் தரித்துத் தனுசு சுப்பிரமணியம் எனத் திருநாமம் பூண்டு விளங்குகின்றார்.

தக்ஷிணாமூர்த்தத்திற்கு **ஸ்ரீ ஹரிகுருசிவயோக தக்ஷிணாமூர்த்தி** என்பது திருநாமம். இது தக்ஷிணா மூர்த்தியின் 18 பேதங்களுள் ஒன்று. வலத்து மேற்றிருக்கரத்தில் கபாலமும், இடத்துப் பக்கத்தில் சூலமும், கீழ் வலக்கரகத்தில் சின்முத்திரையும், இடக் கரத்தில் சிவஞானபோதமும், பாதத்தின் கீழ் கூர்மமும் அமைந்து அருள்புரிகின்ற மூர்த்தி.

சுவாமியின் துவார பாலகர்களில் **ஆட்கொண்டார்** இயமனைக் காலின்கீழ்வைத்து வதைக்கும் திருக் கோலத்தில் கோயில்கொண்டெழுந்தருளி இருக்கிறார். இவர் மூர்த்திகரம் மிக்கவர். இங்குக் குங்கிலிய மிட்டு வழிபாடு இயற்றப்படுகிறது.

## 4. தீர்த்தங்களும், தலவிருக்ஷமும்

காவிரியாறு, சூரியபுஷ்கரிணி (அயனரி தீர்த்தம்), சமுத்திர தீர்த்தம், தேவாமிர்த தீர்த்தம், நந்தி தீர்த்தம், எனப்பல தீர்த்தங்களிருக்கின்றன. அவற்றில் சூரிய புஷ்கரிணியும், காவிரியும் மிக முக்கியமானவை. இங்கு வந்து காவிரியில் ஒரு நாள் மூழ்கினும் மற்ற இடங்களில் துலாமாதம் முழுவதும் முழுகியதைவிடப் பயன் மிக அதிகம். படித்துறையோடுகூடிய பூச




ஸ்ரீ தனுசு சுப்பிரமண்யசுவாமி




ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி



திருக்குளம்



காவிரி பூசப்படித்துறை




அகத்தோற்றம்

மண்டபத்துறை என்னும் அழகிய மண்டபமோன்று காவிரிக்கரையில் கட்டப்பெற்றிருக்கிறது. இத்தலத் திற்கு வில்வம் தல விருக்ஷம்.

## 5. புராணவரலாறு

**தன்னைத்தான் பூசித்தது :-** ஐயாறப்பரைப் பூசை செய்துவந்த ஆதிசைவர் இருபத்துநால்வருள் ஒருவர் காசி யாத்திரை சென்றனர். மற்றையோர் அவருடைய காணி முதலிய உரிமைகளைக் கவர்ந்தனர். அவருடைய மனைவியாரும் மைந்தரும் ஐயாறப்பர் அடியிணையில் வீழ்ந்து வேண்டி நிற்க, இறைவன் விருத்தராய்ச் சிவ வேதியர் உருக்கோண்டு, அவ்வேதியர் மனைபுகுந்து மனைவியை உசாவி அறிந்து கோயிலில் இறைவனை நியமப்படி பூசித்து, ஒரு மடத்தில் தங்கி இருந்தனர், இச்சமயத்தில் கங்கையாடச்சென்ற ஆதிசைவர் அவ்விடம் வரவே யாவரும் ஐயங்கோண்டனர். அந்தணர் வடிவுகோண்டு வந்த இறைவன் ஆதி சைவரை நோக்கி "நீர் யார்" என்று வினவ "யான் இச்சிவனை அருச்சிக்கும் அந்தணாளர் இருபத்து நால்வருள் ஒருவன்" என்றார். இருவரும் தத்தமக் குரிய ஆவணங்களைக் காட்டினார்கள். அவையின் கண் இருந்த பலரும் கையெழுத்தை ஒத்துப்பார்த்து அந்தணருடையதே மெய்ச் சாசனம் எனக்கண்டனர், ஆதிசைவர் குதூகலித்து நிற்ப, பெருமான் ஆகாயத்தில் உண்மைத் திருக்கோலத்துடன் காட்சி அளிப்ப, அனை வரும் கண்டு தரிசித்து ஆனந்தமுற்றார்கள்.

இந்த ஐதிகத்தில் இன்றும் சோமாஸ்கந்த மண்டபத்தில் உள்ள ஒரு ஸ்படிகலிங்க மூர்த்தமும் அம்பிகையின் மூர்த்தமும் பூசிக்கப்பட்டு வருகின்றன.

**திருநந்திதேவர் :-** மகப்பேறு இன்மையினுல் வருத்தமுற்ற சிலாதமுனிவர் ஐயாறப்பனைப் பூசித்துத் தவஞ்செய்ய, ஐயாறப்பர் "சிலாதனே, நீ புத்திர காமேட்டியாகம் செய்தல்வேண்டும். யாகம் செய்து யாக பூமியை உழும்போது பேட்டகம் ஒன்று தோன்றும், அதில் ஒரு புத்திரன் காணப்படுவான், அவனுக்கு வயது பதினுறு; அவனை எடுத்துக்கோள்" எனத் திருவாய்மலர்ந்தருளினுர். அவ்வாறே சிலாத முனிவரும் யாகமுடிவில் பூமியை உழுங்கால் ஒரு பேட்டகம் அகப்பட அதனைத் திறந்து பார்த்தனர். அதில் நான்கு தோள்களும், மூன்று கண்களும் சந்திரனை யணிந்தமுடியும் கோண்டுவிளங்கும் ஒரு மூர்த்தியைக் கண்டு வணங்கினுர். ஐயாறப்பர் அசரீரியால் "பேட்டியை மூடித்திற" என்று கட்டளையிட்டருளினுர். அவ்வண்ணமே மூடித்திறந்ததும் அம்மூர்த்தி முன்னைய வடிவம் நீங்கி அழகிய குழந்தை வடிவுடன் திகழ்ந்தது. பேற்ருேர்கள் அக்குழந்தைக்குச் செப்பேசன் என்று திருநாமகரணம் செய்து வளர்த்துவந்தார்கள். சேப்பேசுரர் பதினுன்கு வயதிற்குள் வேதாகம சாஸ்திரங்களாதிய சகல கலைகளிலும் வல்லுநராயினுர்.

அறிவின்மிக்க இம்மைந்தனை இன்னுமிரண்டு வருடத்தில் இழக்கநேருமே என்று ஏங்கிய தாய் தந்தையரைக் கண்ட சேப்பேசர், ஐயாறப்பன்

ஆலயத்தையடைந்து பூசித்து அயனரிதீர்த்தத்தில் நீராடிக் காலின்மேல் காலேயூன்றிக் கடுந்தவம் செய்தனர். சேப்பேசுவரரின் அருமைத் திருமேனியை நீர்வாழும் பாம்பு, மீன் முதலியவைகள் அரித்துத் தின்றன. பன்னாளாகியும் வெளி வாராமையைக்கண்ட தாய்தந்தையர்களும் மற்றையோரும் கலங்கினர். சேப்பேசரின் உறுதியான அன்புக்கு இறைவன் எளிவந்து காட்சிகோடுத்து வேண்டும் வரங்களேயும், பதினாறு பேறுகளேயும் கோடுத்தருளினார்.

மேலும் இறைவன் சேப்பேசரது எற்புடம்பைக் கண்டு அவ்வுடம்பை நலமுறச் செய்தல்வேண்டுமெனத் திருவுளங்கோண்டு [1] கங்கைநீர், [2] பிரமன் கமண்டல நீர், [3] அம்பிகையின் கோங்கைப்பால், [4] கோண்டல்நீர், [5] இடபநந்தியின் வாய்நுரைநீர் என்னும் ஐந்து நீரினாலும் தாமே அபிடேகஞ் செய்தார். சேப்பேசரின் உடல் ஊறு நீங்கிச் சூரியனைப்போல் விளங்கிற்று.

---

குறிப்பு :–

'' அஞ்சுவகை நீராடி அருணந்தி தவம்புரியும்
பஞ்சநதிப் புராணத்தைப் படிப்பாரும் வரைவாரும்
விஞ்சுபோருள் கேட்பாரும் விட்டகுறையால் வந்த
தஞ்சமுருத்திரர் அவர்க்கே சாரூபம் சத்தியமே,''

என்பதன் குறிப்புரையில் [1] சூரியபுட்கரிணி தீர்த்தம். [2] கங்கா தீர்த்தம். [3] சந்திரகிரணத்தாலுண்டான அமிர்த தீர்த்தம், [4] உமையம்மையின் தனத்திலுண்டான பாலாறு. [5] நந்திவாய்நுரைத் தீர்த்தம் என்றுள்ளவற்றில் பிரமன் கமண்டலநீர், கோண்டல்நீர் இரண்டற்கும் ஈடாக இருசுடர் தீர்த்தம் உள்ளன.

சிலாதமுனிவர், வசிஷ்ட முனிவர் பௌத்திரியும், வியாக்ரபாத முனிவருடைய புத்திரியும், உபமந்யு முனிவர் தங்கையுமாகிய சுயம்பிரகாசையம்மையாரைத் தம் புதல்வனுக்குப் பங்குனிமாத புனர்பூச நக்ஷத் திரத்தில் திருமணம் செய்வித்தார். பின் சேப்பேசர் ஐயாற்றண்ணல்பால் உபதேசம் பெற்றுக் கயிலையில் சிவ கணங்களுக்குத் தலைவராம் பதவியும், முதற்றிரு வாயினில் இருந்துகாக்கும் உரிமையும்,சைவாசாரியருள் முதற் குருவாந் தன்மையும் பெற்றார்.

அகத்தியர் :- இவர் மாதவர்கள் புடைசூழ இத் தலத்திற்குவந்து சூரியபுஷ்கரிணியில் நீராடி, நித்ய கர்மம் முடித்துச் செம்பொற்சோதியாரை வணங்கித் தோத்திரம் செய்து உணவு நீக்கித் தவஞ்செய்தார். அருந்தவமுணர்ந்த இறைவன் இடபாருடராய்க் காட்சி யளிக்க, அகத்தியரும் வணங்கி "அடியேன் உம் திருவடிகளுக்கு அடங்கி நின்று தோத்திரம் செய்யத் தக்க சிறியவடிவந் தந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். இறைவனும் குறள்வடிவத்தைக் கொடுத்து "உம்பெயர் குறுமுனியாகுக" என்றும் அருள்புரிந்தனர். அன்று முதல் அகத்தியர் குறுமுனி யாயினர். அகத்தியர் மீண்டும் இறைவனை நோக்கி "அடியேன்மனம் கயிலையைக்காண விழைகின்றது" என்றுவேண்ட, ஐயாறப்பரும் "பஞ்சாக்கரம் ஓதி, சூரியபுஷ்கரிணியில் மூழ்கிக் கயிலையடைந்து நம்மைக் காண்பீராக" என்றனர். அவ்வண்ணமே அகத்தியரும் மூழ்கிக் கயிலையை யடைந்தனர்.

**ஆட்கொண்டார் :-** கௌதமீ தீர வாசி சுசரிதன் என்பான் ஓர் அந்தணச் சிறுவன் தந்தையும், தாயும் இறந்தபின் வருத்தமேலீட்டால் தன் ஊர் நீங்கித் தலயாத்திரை செய்பவனுகி, திருப்பழனம் வந்து தங்க அன்றிரவு கனவில் இயமன் தோன்றி "இன்று ஐந்தாம் நாள் மரணம் அடைவாய்" என்றனன். அது கேட்டு அஞ்சித் திருவையாறு சென்று சிவதரிசனம் செய்வதே இதற்குத் தகுந்த பரிகாரம் எனத் தேறினன். அங்கு வசிட்டர் அருளியபடி சிவதரிசனம், பஞ்சாக்கர ஜபம் முதலியன செய்து வருகையில், சொல்லியபடியே ஐந்தாவது நாளில் சிறுவன்முன் இயமன் தோன்றினன்.

வசிட்டர், எமபயத்தை நீக்கிக்கொள்ளத் தெற்குக் கோபுரவாயிலில் சுசரிதனை இருந்து ஜபீக்கும்படி பணித்துத் தாமும் ஜபித்தனர். ஐயாற்றுப்பெருமானுர் துவாரபாலகரை ஏவி அந்தணச் சிறுவனைக் காக்குமாறு பணித்தார்; அஞ்சாது எதிர்த்த இயமனை அவர் சங்கரித்து ஒழித்தார். பின் சிவபெருமான் தெற்கு வாயிலின் மேற்புறத்தே தோன்றிச் சுசரிதனுக்கு ஆசிகூறி ஆயுளுமருளி 'இல்லறத்திருந்து மகப் பேறடைந்து முத்தியும் அடைக' எனக்கூறினர்; இயமனுக்கும் உயிர் கொடுத்து, இத்தலத்திலிருக்கும் தன்னடியாரையும், தரிசிப்போரையும் நெருங்காதிருக்கு மாறு பணித்து மறைந்தனர். இயமபயந் தீர்த்த அந்த மூர்த்தியே ஆட்கொண்டேசப்பெருமான் ஆவர். அவர் சந்நிதாநத்திலே எந்நாளும் ஒளிவீசிப் புகைவது குங்கிலியம்.

**அம்பிகையார் :-** அறப்பெருங் கருணையினால் எல்லா ஜீவராசிகளையும் படைத்துக் காத்தருளும் அகிலநாயகனும் எம்பெருமான் பஞ்சநதீசன் தனது ஆன்ம நாயகியாம் அறம்வளர்த்த நாயகியாரின் அரும்பெருந் திருவிளையாட்டினை அவனியோர்கண்டு மகிழுமாறு அறங்கள் செய்ய இருநாழி நெல்லை அளித்தனன். அன்னையார் அதனைப் பெற்றுத் தம் அற்புத சக்தியால் அறங்கள் முப்பத்திரண்டனையும் ஆற்றினள் ஆதலின் ஸ்ரீ அறம்வளர்த்த நாயகியார் (ஸ்ரீ தர்மசம்வர்த்தனீ) எனத் திருப்பெயர் பெற்றார்.

**திருநாவுக்கரசர் :-** காளத்தியை வணங்கிய அப்பர் கயிலையையுங்கண்டு தரிசிக்கவேண்டுமென்னும் விருப்பால் கடுநெறிகளைக் கடந்து செல்லுங்கால் உடலெலாந் தேய்ந்தும் உளந்தேயாதவராய் அயர்ந்தார். இறைவன் ஒரு முனிவுருக்கொண்டு எழுந்தருளி யாதுமறியாதவர்போல் சுவாமிகளை நோக்கி "கயிலாயம் மானிடவுடல்கொண்டு சென்று தரிசிப்பது அரிது; திரும்பிச் செல்வதே கடன்" எனத் திருவாய்மலர்ந் தருளலும், சுவாமிகள் "கயிலைகண்டன்றி இவ்வுடல் கொண்டு மீளேன்" என்றார்கள். சுவாமிகளது உறுதியையறிந்த இறைவன் விண்ணிடை மறைந்து நின்று "நாவுக்கரசே! எழுந்திரு" என்று அருளலும், தீங்குநீங்கிய யாக்கையுடனெழுந்து அஞ்சலிசெய்து தோத்தரித்தார்கள். கயிலைநாயகரும் நீ இங்குக் காணப் படும் பொய்கையில் மூழ்கி எமது திருக்கோலத்தை ஐயாற்றில் கண்டு தரிசிக்க என உணர்த்தியருளினார்.



ஸ்ரீ ஆட்கொண்டார்

ஏழூர்த் திருவிழாவில்



கண்ணுடிப் பல்லக்கில் ஐயாறப்பர்

சுவாமிகளும் அஞ்செழுத்தோதிப் போய்கையில் மூழ்கி ஐயாற்றில் சூரியபுஷ்கரிணி தீர்த்தத்திலெழுந்து அங்குள்ள ஆலயத்தில் கயிலைக்காட்சியைக்கண்டு தரிசித்தார்கள்.

சுந்தரர் :- திருக்கண்டியூரைத் தரிசித்துவிட்டுச் சேரர் பெருமானுடன் ஐயாற்றைத் தரிசிக்க வரும் வழியில் காவிரி பெருக்கெடுத்து ஓடங்களும் செல்ல முடியாத நிலைமையில் இருக்கக்கண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'பரவும் பரிசொன்றறியேன்' என்னும் திருப்பதிகம் பாடியருளினார்கள். திருவருளால் காவிரி நீர் மேற்குப் பக்கத்தில் மலைபோல் நிற்க, கிழக்குப் பக்கத்தில் நீர்வடிந்து மணற்பரப்புத் தோன்றிற்று. சுவாமிகளும் அவ்வழியே சென்று ஐயாறப்பரைத் தரிசித்தார்கள்.

சுவாமிகள் ஆற்றின் அக்கரையில் நின்று பதிகம் பாடியபொழுது இக்கரையில் எழுந்தருளியிருக்கும் விநாயக மூர்த்தி "ஓலம்" (அபயம்) என்றனர். அதிலிருந்து அவருக்கு ஓலமிட்ட விநாயகர் எனத் திருநாமம் வழுங்குவதாகப் புராணம் கூறும்.

## 6. ஏழூர் வலம் வருதல்

1. திருவையாறு, 2. திருப்பழனம், 3. திருச்சோற்றுத்துறை, 4. திருவேதிகுடி, 5. திருக்கண்டியூர், 6. திருப்பூந்துருத்தி, 7. திருநெய்த்தானம் என்னும்

ஏழு தலங்களையும் சித்திரைப் பூரணையில் சுயம் பிரகாசையாம் அம்மையோடு நந்திபெருமானும், அறம் வளர்த்த நாயகியாரோடு ஐயாறப்பரும், அலங்கரிக்கப் பட்ட கண்ணுடிப் பல்லக்கில் புறப்பட்டு ஒவ்வொரு தலங்களுக்கும் முறையேசென்று, அவ்வூர்மூர்த்தியோடு எழுந்தருளியிருந்து சோடசஉபசார முதலியன நடந்தபின் அவர்களும் பல்லக்குகளில் உடன்வர மறுநாட்காலையில் ஐயாற்றிற்கு எழுந்தருளுவார்கள். மக்கள் இவ் விழாவைத் திருநந்தி தேவரின் திருமண ஊர்வல மென்பர். இவ்விழா எத்தலங்களிலும் இல்லாத தனிச் சிறப்புடையது.

1. திருப்பழனம் :- திருவையாற்றிலிருந்து கும்ப கோணம் போகும் பாதையில் இரண்டு மைலில் இருக் கிறது. இத்தலத்துத் தேவாரத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள் அப்பூதியடிகளைச் சிறப்பித்துப் பாடியது உளது. சுவாமி திருப்பெயர் ஆபத்சகாயர். அம்மையார் பெரியநாயகி.

2. திருச்சோற்றுத்துறை :- கௌதம முனிவர் ஆச்சிரமம். இந்திரன், சூரியன் முதலியோர் பூசித்தது. அருளாளர் என்னும் பிராமண பக்தருக்கு அக்ஷய பாத்திரம் அருளியது. இத் தலம் திருக்கண்டி யூரினின்றும் கிழக்கே ஒன்றரைமைலில் உள்ளது. திருவேதிகுடியினின்றும் வடக்கே இரண்டு மைலில் உள்ளது. சுவாமி திருப்பெயர் தொலையாச்செல்வர். அம்மையார் ஒப்பிலாவம்மை.

3. **திருவேதிகுடி** :- வேதம்பூசித்த தலங்களில் ஒன்று. விநாயகரும் வேதவிநாயகர் என வழங்கப் பேறுவர் திருக்கண்டியூரினின்று கிழக்கே $2\frac{1}{2}$-மைலில் உள்ளது. சுவாமி திருப்பெயர் **வேதபுரீசுவரர்**. அம்மை **மங்கையர்க்கரசி**,

4. **திருக்கண்டியூர்** :- இது வீரட்டத் தலங்கள் எட்டில் ஒன்று. பிரமன் சிரம் கோய்த தலம். திருஞான சம்பந்த சுவாமிகள் 6-ங் திருப்பாட்டிலும், திருநாவுக் கரசு சுவாமிகள் 3-ம் திருப்பாட்டிலும் ஓதியருளி ஞர்கள். சதாநந்தர் பூசித்து வழிபட்டது. இத்தலம் தஞ்சாவூரிலிருந்து திருவையாற்றுக்கு வரும் கற்சாலை யில் 7-மைலில் உள்ளது. இங்குப் பிரமனுக்குத் தனி ஆலயம் இருக்கிறது. சுவாமி திருப்பெயர் **வீரட்டேசுவரர்**, அம்மை **மங்களநாயகி**

5. **திருப்பூந்துருத்தி**:- இந்திரன், காசிபர், சோழன் முதலியோர் பூசித்தது. இங்குத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்குத்தரிசனம் கிடைக்க நந்திவிலகினரேன்று கூறுப. திருநாவுக்கரசு சுவாமிகள் திருமடங்கட்டி எழுந்தருளியிருந்த தலம். பாண்டிநாடு சென்று வந்த திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய பல்லக்கைத் திருநாவுக்கரசு சுவாமிகள் தாங்கியது இங்கேதான். இத்தலம் திருக்கண்டியூருக்கு மேற்கே இரண்டுகல் தொலைவில் உள்ளது. சுவாமி திருப்பெயர் **புஷ்பவனநாதர்**. அம்மையார் **அழகார்ந்தநாயகி**.

**6. திருநெய்த்தானம் :-** இத்தலம் சரசுவதி பூசித்து வழிபட்டது. திருவையாற்றுக்கு மேற்கே ஒரு மைலில் உள்ளது. சுவாமியின் திருநாமம் **நெய்யாடியப்பர்.** அம்மை **வாலாம்பிகை.** இப்பொழுது இது தில்லைஸ்தானம் என மருவி வழங்கப் பேறுகின்றது. சப்தஸ்தான உற்சவத்தில் ஐயாறப்பர் கடைசியாக இங்கு எழுந்தருளி மீண்டும் ஐயாறு அடைவார்.

## 7. முத்திபெற்றோர்

திருமால், பிரமன், இந்திரன், சூரியன் முதலிய தேவர்களும், அகத்தியர், ததீசி, விரசன், கௌதமர், காசிபர், அங்கிரர், குற்சர், அத்திரி, பிருகு, வசிஷ்டர்‘ சதானந்தர், சிலாதர் முதலிய முனிபுங்கவர்களும், சிவதாசன், துஷ்பிரவர்த்தி, துஷ்பிரக்ஞன், சிவப்பிரியன், சுரதன், தருமநாசன், நாதசன்மா, வாலியார், சுசரிதன், சுரிகாலன் முதலிய பேரியோர்களும் பூசித்துப் பேறுபெற்றுள்ளார்கள்.

## 8. மண்டபம்

முத்திமண்டபம் :- நாகப்பட்டினம் திருவையாறு காசி என்னும் மூன்று தலங்களில்தான் இம்மண்டபம் இருக்கிறது. இந்த மண்டபம் இத்தலத்துச் சபேச மண்டபமேன வழங்கும்.

**நூற்றுக்கால்மண்டபம் --** இது தண்டபாணி கோயிலாக இன்று இருக்கிறது.

**உற்சவமண்டபம் :** சுவாமி கோயிலிலும் அம்மை கோயிலிலும் தனித்தனியாக இருக்கின்றன.

இவையன்றி ஆஸ்தான மண்டபமும் பிரசங்க சபா மண்டபமும் மூன்ருவது பிராகாரத்திலிருக் கின்றன. சொக்கட்டான் மண்டபம் ஐயாறப்பர் சந்நிதியிலிருக்கிறது.

## 9. சுற்றுக்கோயில்

**தக்ஷிணகைலாயம் :-** இது கோயிலுக்குள் தென் பால் இருக்கிறது.

**உத்தரகைலாயம் :-** இது ஒலோகமாதேவீச்சரம் என வழங்கும். கோயிலுக்குள் வடபால் இருக்கிறது.

**தண்டபாணிகோயில் :-** இது வெளிப்பிராகாரத்து இராசகோபுரத்தை அடுத்துள்ள நூற்றுக்கால் மண்ட பத்தில் அமைந்துள்ளது.

## 10. திருவிழா

சித்திரை மாதத்தில் பெருவிழா நடைபெறும். இது பன்னிருநாள் விழா. ஐந்தாவதுநாள் திருவிழா மிகச் சிறப்புடையது. அன்று இறைவர் ஐயாறதனிற் சைவனுகித் தன்னைத்தானே பூசித்துக்கொள்வார். அன்று திருநெய்த்தானம் முதலிய ஆறு ஊர்களிலிருந்து வரும் மூர்த்திகட்கும் சுவாமிகட்கும் சைவ ஆசாரியப் பெருமக்கட்கும் மாகேசுவரபூசை நடத்தப்பெறும்.

**ஏழூர்விழா :-** இத்தலத்துக்குச் சிறப்பானது. ஐயாறப்பர் அறம்வளர்த்த நாயகியாருடன் புறப்பட்டு நந்தியெம்பெருமான் சுயம்பிரகாச நாயகியோடும் திருப் பழனம் முதலிய ஆறு தலங்கட்கும் எழுந்தருளி உபசாரங்கொண்டு மறுநாட் காலையில் ஐயாற்றுக்கு எழுந்தருளுவார்கள். இவ்விழா சித்திரைப் பூரணையில் நடைபெறும்.

**மாதவிழா :-** மாதந்தோறும் அமாவாசை விஷு புண்ணியகாலங்களில் ஐயாறப்பர் திருவீதிக்கெழுந் தருளி, காவிரியில் தீர்த்தங்கொடுத்தருளுவார்

பங்குனியில் திருநந்திதேவர் திருமணம் நடை பெறும். அதற்கு ஐயாறப்பர் அறம்வளர்த்த நாயகி யாருடன் திருமழபாடிக்கு எழுந்தருளுவார்.

## 11. சிற்பம்

இத்தலத்துச் சிற்பங்கள் மிகப்பழமையானவை. இங்குள்ள பிரமாவின் திருவுரு மிக அழகானது. இங்குள்ள ஆட்கொண்டாராகிய க்ஷேத்திரபாலரும் அவர் திருவடியின் கீழுள்ள எமனும் வழிபடுவார்க்கு அச்சம் வீரம் என்ற இரண்டு தன்மைகளைத் தோற்று கின்ற அழகிய உருவங்கள். தக்ஷிண கயிலாயத்துக் கருப்பக்கிருக வெளிச் சுவரிலும் கொடுங்கை முதலிய வற்றிலும் காணப்படும் சிற்பத்திறங்கள் தெக்காணத்தி லுள்ள சாளுக்கியர் காலத்து வேலைப்பாடாக விளங்கு கின்றன என்றும், இதனை ஒத்த அழகிய அமைப்பு

அனந்தப்பூர் ஜில்லாவில் ஹேமாவதி என்ற ஊரிலிருக்கிறதேன்றும் சிற்ப நூல் ஆராய்ச்சியாளர் சோல்கின்றார்கள்.

## 12. திருப்பணி

இவ்வாலயத்தை முதற்றிருப்பணி செய்தவர் பிரிய விருதன் என்னும் சூரியவம்ச சக்ரவர்த்தியாவன். அவன் தலயாத்திரை செய்து இங்கு வந்ததும் இவ்வாலயத்தைத் திருப்பணி செய்து மஹா கும்பாபிஷேகம் செய்விக்க அசரீரியால் உணர்த்தப்பேற்றான். அவ்வரசனும் அவ்வாறே செய்துமுடித்தான்.

இரண்டாவதாகச் சோழர்களுள் மிகச் சிறப்புற்றோங்கி இமயத்தில் புலிக்கோடி நாட்டிய கரிகாற்பேருவளத்தான் என்பவன் இங்குத் தரிசனத்திற்கு வந்தபோது இரதம் பூமியில் அழுந்திவிட, அங்குத் தோண்டிப்பார்க்கச் சிவலிங்கம், அம்பிகை, விநாயகர், சுப்பிரமணியர், சப்தமாதர், சண்டீசர் முதலிய மூர்த்தங்களும், நியமேசரேன்னும் முனிபுங்கவரும் இருக்கக் கண்டு வணங்கினன். முனிவர் யாரையும் வேல்லும் தண்டமோன்று கோடுத்து இக்கோயிலைத் திருப்பணி செய்யுமாறு பணித்தார். திருப்பணிக்கு வேண்டிய போருள் இன்மையைக் கண்டு அரசன் வருந்த, நந்தியின் குளம்படியில் போன், வேல்லம், கருங்கல் மூன்றும் கிடைக்க அருள்புரிந்தார். அரசனும் ஆலயத்

திருப்பணியைப் பூர்த்தி செய்து கும்பாபிஷேகமும் நடத்திவைத்தான். பூசனைக்குப் பல நிவந்தங்களும் அவனால் விடப்பட்டனவாகத் தெரிகின்றன.

தஞ்சையை ஆண்ட நாயக்கர் குலத்துதித்த அச்சுததேவப்ப நாயக்கரின் அமைச்சராகிய கோவிந்த தீக்ஷிதரால் திருப்பணி செய்விக்கப்பட்டிருக்கிறது. தேவகோட்டை நகர தனவைசியர் ஸ்ரீமான் உ. ராம மெ. சுப. சேவு. சேவுகஞ் செட்டியார் குமாரர் திரு. மெய்யப்ப செட்டியார் அவர்கள் சுவாமி கோயிலைப் பழுதுபார்த்துத் திருப்பணி செய்து முடித்தார். 1937-ல் கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. அம்மையார் கோயில் கருப்பக்கிருகம் நல்ல கருங்கற்களைக் கொண்டு திருப்பணி செய்யப்பட்டிருக்கிறது. இத் திருப்பணியாளர் இப்பொழுது அம்மையார் கோவிலில் ஓர் உற்சவ மண்டபமும் இராஜகோபுரமும் கட்டித் திருப்பணி செய்திருக்கிறார்கள்.

இப்பால் தேவஸ்தானம் செலவில் சுவாமிகோயில் இரண்டாம் பிராகாரம் திருமாளிகைப்பத்தியும், நான்காம் பிராகாரத்தில் தளவரிசையும் கருங்கல்லாலும், செங் கல்லாலும் செய்திருக்கின்றன. தக்ஷிணகைலாயமும் புஷ்யமண்டபமும் பழுதுபார்த்துத் திருப்பணி செய்யப் பட்டிருக்கிறது. தண்டாயுதபாணி கோவிலும் பழுது பார்த்துத் திருப்பணி நடைபெற்றுள்ளது. சுவாமி சந்நிதியில் கருங்கல் தளவரிசை இடப்பட்டுள்ளது.

யாத்ரீகர்கள் சௌகரியத்திற்காகவும் உயர்தர அதிகாரிகள், தகுந்த மனிதர்கள் தாற்காலிகமாகத் தங்கிப்போகவும் இரண்டு இலவச விடுதிகள் அம்மன் கோயில் சந்நிதி தெருவில் அமைக்கப்பேற்றுள்ளன.

## 13. சொத்துக்கள்

நஞ்சையில் சுமார் 400 ஏக்கரும், புஞ்சை வகையருவில் சுமார் 300 ஏக்கரும் பூஸ்திதி உண்டு. சில கடைகளும், வீடுகளும் இருக்கின்றன.

**திருவாபரணங்கள் :-** வேள்ளி, தங்கத் திருவாபரணங்கள் இருக்கின்றன.

**வாகனங்கள் :-** வெள்ளியில் ரிஷப வாகனங்கள் 2, பிரதோஷவாகனம் 1, கமலவாகனம் மஞ்சத்துடன் 1, படிச்சட்டம் 1 இருக்கின்றன.

**வருமானம் :-** நிலம், கடை, கட்டிடங்கள் இதர வகை எல்லாமாக சுமார் ரூ. 70,000 வருமானம் வரும்.

## 14. நிர்வாகம்

தருமபுர ஆதீனத்தின் பரிபாலனத்திற்குட்பட்ட தேவஸ்தானங்களுள் இதுவுமோன்று. 25 ஆவது குருமகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்,** ஆதீன குருபீடத்தில் எழுந்தருளிய **திருநாள்**

1945ஆ ஜூன்மீ 20௨ முதல் இவ்வாலயத்தைப் பரிபாலனம் செய்து வருகிறார்கள்.

## 15. கல்வெட்டுக்கள்

இத்தலத்துக் கோயிலுக்குள்ளே ஐயாறப்பர் கோயில், ஒலோகமாதேவீச்சரம், தென்கயிலாயம், திரிபுவனமாதேவீச்சரம் என்ற நான்கு கோயில்கள் வரலாற்றுத் தொடர்புடையனவாக இருக்கின்றன. அவற்றைப்பற்றிய குறிப்புகளைத் தனித்தனியே தொகுத்துநோக்கிப் பின்னர் அரசர்கள் செய்த பணிகளைத் தனித்தனியாகச் சிந்திப்பதே முறை.

**தொன்மையும் அமைப்பும் :**

கோயிலின் தொன்மை, அதன் அமைப்பையும், தூண், கொடுங்கை, உருவங்கள் இவற்றையும்கொண்டு ஆய்ந்து அறியத்தக்கது. சிற்பங்கட்கே முதன்மை பல்லவசிற்பங்களாலே விளைவன. மாமல்லபுரத்துக் குடைகோயில் சிற்பங்களில் துவாரபாலகர் இரு கரங்களோடு தாளைச் சிறிதுசாய்த்து ஊன்றிக்கொண்டு இடுப்பு ஒடியோடு நிற்பதைக் கண்டிருக்கலாம். அத்தகைய அமைப்பு எங்குக் கண்டாலும் அதைப் போன்ற தொன்மையுடையது என்று சொல்லிவிடலாம் அல்லவா? திருவையாறு ஐயாறப்பர்கோயில் திருவணுக்கன் திருவாசலில் உள்ள துவாரபாலகர் இரு கைகளோடு நிற்கின்றார். இதனைக்கொண்டு இக்கோயில்

பல்லவகாலப்படைப்பாக இருக்கலாம் என்று ஊகிக்கலாம். சோமாஸ்கந்தர் ஆலயம் சோழர் நாகரிகமாகத் தோற்றம் அளிப்பதற்கும் துவாரபாலகர் நான்கு திருக்கரங்களோடும் வக்கிரதந்தங்களோடும் இருப்பதே காரணம் ஆகும்.

வரலாற்றுப்பகுதியில் பரகேசரியென்ற பட்டத்தை முதன்முதல் தாங்கிய முதற்பராந்தகன் காலம் முதற் கோண்டு (905 - 947) விளக்கத்திருந்தமை வேளிப்படை.

மூன்ரும் பிராகாரத்துக் கீழக்கோபுரம் விக்ரம சோழன் திருப்பணி என்பது கல்வெட்டால் விளங்குதலின் அதுவும் தோன்மைக்கும் பராமரிப்புக்கும் துணையாகும்.

பின்னர், புக்கண்ண உடையார் பரம்பரையில் வந்தவரான வீரசேவ்வண உடையார் காலத்தில் (கி. பி 1381-ல்) இத்திருக்கோயில் திருமண்டபம், மதில் சீர்திருத்தப்பேற்றன. சீர்திருத்தியவர் சேந்தலைக் கருப்பூர் கச்சிவீரப்பேருமான் மகனுராவர்.

மேலக்கோபுரமும், முதல் பிராகாரத்துத் திருமாளிகைப்பத்தி முதலியனவும், மூன்ரும் பிராகாரத்துத் தேற்குக்கோபுரமும் அச்சுதப்பநாயக்கர் ஆட்சிக் காலத்தில் மருதூர் ஆனையப்பப்பிள்ளையாலும், அவர்

தம்பி வைத்தியநாத அண்ணன் என்பாராலும் எடுப்பிக்கப்பெற்றன. இவர்களே பூசப்படித்துறை கட்டியவர்கள். படித்துறைக்கு அவர்கள் வைத்த பெயர் கல்யாணசிந்து என்பதாம்.

**சிற்பங்கள் :**


ஆனையப்பப்பிள்ளை உருவமும், வைத்தியநாத அண்ணன், அவர் தாய்தந்தையர்கள் படிவமும் மேற்பிராகாரத்திலிருந்திருக்கின்றன. உடைந்துபோன படிவங்களின்மேல், பெயர்மட்டும் அழியாது இருந்து உண்மையை யுணர்த்தி வருகின்றன. அவ்வாறே அச்சுதப்பநாயகர் அவர் மனைவியார் படிவங்களும் அதே இடத்து அழகாக அமைக்கப்பெற்றுள்ளன. நாயக்கமன்னர்கட்கு எங்கும் தம்முருவத்தைப்பதித்துப் பார்ப்பதில் ஆசை என்பதைத் திருநெல்வேலிக் கல்வெட்டும் படிமங்களும் சான்று கூறும். அவ்வாறே பச்சையப்ப முதலியார் தம் இரண்டு மனைவியரோடு மண்டபத்தில் இருக்கிறார்.

**அம்மையார்கோயில் :**

அம்மை திருப்பெயர் திருக்காமக்கோட்டத்து ஆளுடையநாச்சியார் என்றும், உலகுடையநாச்சியார் என்றும், இரண்டு கல்வேட்டிற் காணப்பெறுகின்றது. இப்போது அறம்வளர்த்தநாயகி எனவும், தர்மாம்பிகை தர்மஸம்வர்த்தனி எனவும் வழங்கி வருகின்றது.



அப்பருக்குக் கயிலைக் காட்சியை அருளிய தென்கயிலை



வடகயிலாலம் ஓலோகமாதேவீச்சரம்

109941

இத்தலம், 1-ம் ராசராசன் காலத்து ராசேந்திர சிங்கவளநாட்டுப் போய்கைநாட்டுத் திருவையாறு என்றும், மூன்றாங்குலோத்துங்கன் காலத்துப் புவனி முழுதுடையான் வளநாட்டுப் போய்கை நாட்டுத் திருவையாறு என்றும், சடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்து ராசராச வளநாட்டுப் போய்கை நாட்டுத் திருவையாறு என்றும் வழங்கிவந்துள்ளது. பெரும் பாலான தலங்கட்குக் கூற்றமும், சதுர்வேதிமங்கலமும் குறிக்கப்பெற்றிருக்க, இது போய்கை நாட்டுத் திருவையாறு எனவே குறிக்கப்பெறுவதால் தனியூராக இருக்கலாமோ என்ற ஐயம் எழுகிறது.

**ஒலோகமாதேவீச்சரம்:**

இது ஐயாறப்பர்கோவிலுக்கு வடபக்கம் பெரிய பிராகாரத்திலிருக்கும் திருக்கோயில். உத்தரகைலாயம் எனவும் வழங்கும். இதனைக் கட்டியவர் முதலாம் இராசராசனது மனைவியாராகிய தந்திசக்திவிடங்கியரான ஒலோகமாதேவியாராவர் இதனாலே இக்கோயில் ஒலோகமாதேவீச்சரம் என வழங்குவதாயிற்று. இம் முதலாம் இராசராச மன்னர் கி. பி. 985-ல் முடிசூடியவர். ஆதலால் இவ்வம்மையார் காலமும் இதுவாதல்துணிபு. இராசராசன் ஆட்சி 21-ம் ஆண்டில் காணப்பெற்ற கல்வெட்டே இக்கோயிலில் உள்ளவற்றில் மிகப் பழமையானது. ஆதலால் இக்கோயில் கி. பி. 1006-ம் ஆண்டிற்கு முன்கட்டப்பெற்றிருக்கவேண்டும். ஆகவே இற்றைக்குச் சற்றேறக்குறைய 936 ஆண்டுகட்கு முன் காணப்பட்டது ஆகலாம்.

O23:38.2H93.
N41-5

அங்ஙனம் கட்டி முடித்த அம்மையார் ஒலோக மாதேவீச்சரமுடையவரான சிவலிங்கப்பெருமானையும் சோமாஸ்கந்தர் முதலிய இதர பரிவாரங்களையும் பிரதிட்டைசெய்வித்தார். சோமாஸ்கந்தர்க்கு ஒலோக வீதிவிடங்கர் எனப்பெயர்.

இக்கோயிலிலும் சித்திரைமாதப் பெருவிழாவே கொண்டாடப்பெற்றது. இதுவன்றி, தன் கணவன் பிறந்த நாளாகிய சதயநாளில் மாதந்தோறும் விழாக் கொண்டாட ஏற்பாடு செய்தாள்.

மற்றும், இங்குள்ள கல்வெட்டுக்களில் தாழ்க் கூட்டுக்கம்பி, திரிசரம், ஓரணை, திருச்சந்தம், முத்து வளையல், பட்டிகை முதலிய அணிவகைகள் குறிக்கப் பெற்றுள்ளன. மக்களின் நாகரிக வளர்ச்சி அவர்கள் அணிந்துவந்த ஆடைவகைகளிலும், அணிகலச் சிறப்பிலுமே இருக்கின்றதென்பது தெளிவு. ஆதலால் அணிப்பெயர்கள் பல இவ்வூர்க் குறிப்பால் வெளி வரலாம். அவ்வாறே மானவட்டில் என்ற ஒரு பாண்டம் குறிப்பிடப்பெறுகின்றது. கோயிலுக்கென்று பதியிலார் குலத்துதித்தார் முப்பத்திருவர் நியமிக்கப்பெற்றிருந் தனர். இவர்களின் தலைமையாக 'ஐயாறன் கலியுகச் சுந்தரத்தலைக்கோலி' என்பான் ஒருவன் இருந்ததாகத் தெரிகிறது.

**திரிபுவனமாதேவீச்சரம் :**

இப்பெயர்கொண்ட திருக்கோயில் ஒன்று இருந்தது. இதனை இரண்டாம்பிராகாரத்து உள்ள மூன்றாங்

குலோத்துங்கன் கல்வெட்டு ஒன்று அறிவிக்கிறது. ஆனால் இக்கோயில் எதுவென இன்றும் தெரியவில்லை.

**தென்கயிலாயம் :**

இது ஐயாறப்பர்கோயில் தெற்குப் பிராகாரத்தில் இருக்கிறது. கற்கோயில், அர்த்த மண்டபம், மஹா மண்டபம், கர்ப்பக்கிருஹம் என்ற மூன்று பிரிவுகளமைந்தது. திருமாளிகைப்பத்தி சூழ்ந்தது. இங்கே அப்பர் சுவாமிகள் வடிவம் அழகாக இருக்கிறது. முதலாம் இராஜேந்திர சோழனின் மனைவியான பஞ்சவன்மாதேவியால் இக்கோவில் புதுப்பிக்கப்பட்டது. இறைவன் பெயர் பஞ்சநதிவாணன். இறைவி பெயர் அஞ்சலை.

ஒரு காலத்தில் இங்குள்ள திருவுருவங்கள் மறைந்து கிடந்தன என்றும், வானவன்மாராயன் என்பான் வெளிப்படுத்தினான் என்றும் கல்வெட்டறிவிக்கிறது. (149 of 1918)

பிற்காலத்துக் கிருஷ்ணராஜ உடையார் என்பவர் திருச்சுற்றுமதிலை இடித்துப் புதுக்கினார். அதற்குமுன் கோயில் நான்கு பக்கமும் மதிலும் மாளிகையும் உடையதாக இருந்ததென்று தெரிகிறது.

இத்தலத்திற்கு 70-க்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் உள்ளன. பெரும்பாலும் அரசாங்கத்தாரால் படியெடுக்கப்பெற்றன. அவற்றைப் பற்றிய குறிப்புக்கள் வெளிவந்துள்ளன. 1894-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் 43. 1918-ம் ஆண்டில் எடுக்கப்பட்டவை 22. 1924-ல் எடுக்கப்பட்டது 1. ஏனையவை பின் எடுக்கப்பட்டன.

பராந்தகன் I: கி. பி. 905—947.

இவனுடையனவும், இவன் காலத்தில் வைக்கப் பெற்றனவுமாக உள்ள பணிகள் பல விளக்கிடவும் அவ்விளக்குகளை நெடிது பாதுகாக்கவும் நிலமும் பொன்னு மளித்த செய்திகளைத் தெரிவிக்கின்றன. 223 முதல் 227, 231 முதல் 236 of 1844 முடிய உள்ள கல்வெட்டுக்கள் வெள்ளியாலும் பொன்னாலும் பல விளக்குகள் வைத்ததையும், அந்த விளக்குகள் நாடோறும் பகல் இரவு எரிந்து வர நிலம் விட்டதையும் அறிவிக்கின்றன. 240 of 2411 1844 கல்வெட்டுக்கள் தன்னாலும் அரசியாலும் விளக்கீட்டிற்குப்பொன்னளித்த செய்தியை விளக்குவன.

இராஜராஜன் I: கி. பி. 985—1015.

இவனைப்பற்றிய கல்வெட்டுக்கள் 17 உள்ளன.

ஆட்சி 9-ம் ஆண்டிலும் 10-ம் ஆண்டிலும் வெட்டப் பெற்ற ஐந்து கல்வெட்டுக்கள் விளக்கிட்டதையும்

விளக்குக்கு நிலம் கொடுத்ததையும் அறிவிக்கின்றன. 19-ம் ஆண்டில் இவனுடைய பட்டமகிஷியால் விளக்கு வைக்கப்பெற்றது.

இராஜேந்திரசோழதேவன் : 1011—1043.

இவனுடைய கல்வெட்டு கோப்பரகேசரி வர்மனான இராஜேந்திரசோழன் என்று தொடங்குகிறது. இவன் கோயிலுக்களித்த நிபந்தங்கள் அறியப்படவில்லை. சிதைவுபட்டுள்ளன.

இராஜாதிராஜன் I : கி. பி. 1018—1052.

இவனுடைய 32-ம் ஆண்டைய நிகழ்ச்சிகள் குறிக்கப்பெற்றிருக்கவேண்டும்.

பரகேசரி இராஜேந்திரன் : கி. பி. 1050—1063

இவன் ஆட்சி 3-ம் ஆண்டில் திருவையாறுடைய மஹாதேவர்க்கு நிலமளிக்கப்பெற்றது,

இராஜேந்திரன் I :

இவன் பட்டமேற்று 5 ஆண்டுகளுக்குமேல் முதற் குலோத்துங்கனானான். இவன் கல்வெட்டுக்கள் 3-ம்,

4-ம் ஆண்டைய நிகழ்ச்சிகளை அறிவிப்பன ஆதலின் இராஜேந்திரன் என்ற பெயராலேயே குறிக்கப்படு கின்றான். இக் கல்வெட்டுக்களின் செய்தி ஒன்றும் தெரியவில்லை.

முடிவுரை :

இவ்வரசர்களின் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் விளக்குத் தருமத்தையே விளக்குவதாக உள்ளன. இக்கல்வெட்டுக்களில் காணப்படும் சில குறிப்புக்களைக் கொண்டு சிலவரலாற்று நுணுக்கங்களும் காணக் கிடைக்கின்றன. 'கோராஜகேசரிவர்மற்கு' என்று தொடங்கும் 10-வது கல்வெட்டில் திருவையாற்று மகாதேவர் திருவமுதினுக்கு அளித்த நிலத்துக்கு எல்லை கூறுங்கால் பழுவேட்டரையன் மசக்கலுக்கு மேற்கு என்ற குறிப்புக் காணப்படுகிறது. அதனால் பழுவேட்டரையராகிய சேரபரம்பரையினர் சோழநாட்டி லும் பரவியிருந்தனர் என்பது துணியப்பெறும்.

முதற் பராந்தகனுடைய மனைவி திரிபுவன மாதேவியார் என்பதும், மாமியார் பெயர் பெருமாள் திருவரங்கி என்பதும் குறிக்கப்பெற்றுள்ளன.

பாண்டிய மன்னர்களில் சடாவர்மன் சுந்தர பாண்டியன் கல்வெட்டு ஒன்றுள்ளது. அதில் அவன் ஆட்சி 2-ம் ஆண்டில் (கி. பி. 23 மார்ச் 1253-ல்) இறைவழிபாட்டிற்காக நிலம் அளித்திருக்கின்றான்.

விஜயநகர மன்னர்களில் ஒருவரான (கி. பி. 1422-49). தேவராயர் என்பாரும், (கி. பி. 1680) சதாசிவராயர் என்பாரும், உத்தரகைலாயத்திற்கும், ஐயாறப்பர் கோயிலுக்கும் நிலம் அளித்திருக்கிறார்கள்.

அம்மங்காதேவி தென்கைலாயமுடைய நாயனார் கோயிலுக்கு விளக்குக்காக 20 காசு பொன்னளித்தாள். இவள் புவனமுழுதுடையாளெனச் சிறப்பிக்கப்பெறுகின்றாள்.

உடையார்மரபைச் சேர்ந்த வீரமுக்கண உடையார் மகனான வீரசேவண உடையாரால் பூசத்திருநாள் வழிபாட்டிற்காக 19 வேலி நிலம் வழங்கப்பெற்றது.

பெயரும், காலமுங் குறிப்பிடப்படாத கல்வெட்டுக்கள் பதினெட்டுள்ளன. அவற்றால், திருவையாறுடைய பரமமகாதேவர்க்கு விளக்கிட 25 கழஞ்சு பொன்னைச் சிவபுரிமன்னனிடம் கொடுத்து அறக்கட்டளை விதித்ததும் (135 of 1918), வாணகப்பாடி பெண்ணை வடகரை இருங்கண்டபுரத்து நக்கனம்பான் என்பவன் விளக்கிட 94 ஆடுகள் கொடுத்ததும் (137 of 1918), இராஜராஜ வளநாட்டுப்பொய்கைநாட்டு திருவையாறுடைய கோயில் பணிப்பெண்டுகளுக்குச் சர்வமானியம் அளித்ததும் (140 of 1918), திருவையாறுடையார், ஆளுடையார், நாச்சியார், ஒலோகமாதேவீச்சரமுடையார், திரிபுவனமாதீச்சரமுடையார் கோயில்களில் தச்சர்களுடைய உரிமை கடமை

சுதந்தரம் முதலியவற்றை வரையறுத்ததும் (142 of 1918) இலாடராயர் மகளான அநிந்திதை என்பாள் தினந்தோறும் ஆதிசைவர்கட்கு அன்னமளிக்க ஏற்பாடுகள் செய்ததும் குறிக்கப்பெறுகின்றன. திருப் பள்ளி எழுச்சிக்காக நிலமளிக்கப்பட்டதென்பதும் (144, 145 of 1918), தக்ஷிண கைலாயத்துக்குத் தாழ்ப்பூட்டுக் கம்பி, திரிசரம், பஞ்சசரி பட்டிகை, குதம்பை முதலிய அணிகள் அளிக்கப்பட்டன என்பதும் (148 of 1918), அறிவிக்கப்பட்டுள்ளன. வரலாற்றுக்கு இன்றியமையாத பழுவேட்டரையர் அருண்மொழி சந்திர மல்லியரான கங்கமாதேவியார் இவர்கள் பேயரும், நிர்வாகத்துறையில் அதிகாரிச்சி குஞ்சரன் எருதன் குஞ்சரமல்லிகையும், அதிகாரிச்சி சோமையன் அமித்ரமல்லியும் உறுப்பினர்களா யிருந் தார்களேன்பதும் குறிப்பிடப்படுகின்றன. இவர்கள் இருவரும் மகளிர்.

உ

சிவமயம்

# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

## பண் — மேகராகக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
    யறிவழிந்திட் டைமமேலுந்தி
அலமந்த போதாக வஞ்சேலேன்
    றருள்செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்க ணடமாட
    முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
    முகில்பார்க்குந் திருவையாறே. 1

விடலேறு படநாக மரைக்கசைத்து
    வெற்பரையன் பாவையோடும்
அடலேற்றென் றதுவேறி யஞ்சோலீர்
    பலியென்னு மடிகள்கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியி
    னுடன்வந்து கங்குல்வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தங்
    கீன்றலைக்குந் திருவையாறே. 2

கங்காளர் கயிலாய மலையாளர்
    கானப்பே ராளர்மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
    விடையாளர் பயிலுங்கோயில்
கொங்காளப் பொழினுழைந்து கூர்வாயா
    லிறகுலர்த்திக் கூதனீங்கிச்
செங்கானல் வெண்குருகு பைங்கான
    லிரைதேருந் திருவையாறே. 3

ஊன்பாயு முடைதலைகொண் டூரூரின்
பலிக்குழல்வா ருமையாள்பங்கர்
தான்பாயும் விடையேறுஞ் சங்கரனர்
தழலுருவர் தங்குங்கோயில்
மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய் மடுக்கடோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல
மொட்டலருந் திருவையாறே. 4

நீரோடு கூவிளமு நிலாமதியும்
வெள்ளெருக்கு நிறைந்தகொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த
தத்துவனர் தங்குங்கோயில்
காரோடி விசும்பளந்து கடிநாறும்
பொழிலணைந்த கமழ்தார்வீதித்
தேரோடு மரங்கேறிச் சேயிழையார்
நடம்பயிலுந் திருவையாறே. 5

வேந்தாகி விண்ணவர்க்கு மண்ணவர்க்கு
நெறிகாட்டும் விகிர்தனகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த
புண்ணியனர் நண்ணுங்கோயில்
காந்தார மிசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினர்வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே. 6

நின்றுலா நெடுவிசும்பி னெருக்கிவரு
புரமூன்று நீள்வாயம்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி
மலையாளி சேருங்கோயில்
குன்றெலாம் குயில்கூவக் கொழும்பிரச
மலர்பாய்ந்து வாசமல்கு
தென்றலா ரடிவருடச் செழுங்கரும்பு
கண்வளருந் திருவையாறே. 7

அஞ்சாதே கயிலாய மலையெடுத்த
வரக்கர்கோன் றலைகள்பத்தும்
மஞ்சாடு தோணேரிய வடர்த்தவனுக்
கருள்புரிந்த மைந்தர்கோயில்
இஞ்சாய லிளந்தெங்கின் பழம்வீழ
விளமேதி யிரிந்தங்கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல
வயல்படியுந் திருவையாறே. 8

மேலோடி விசும்பணவி வியனிலத்தை
மிகவகழ்ந்து மிக்குநாடும்
மாலோடு நான்முகனு மறியாத
வகைநின்ருன் மன்னுங்கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தினின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே, 9

குண்டாடு குற்றுடுக்கைச் சமணரோடு
சாக்கியருங் குணமோன்றில்லா
மிண்டாடு மிண்டருரை கேளாதே
யாளாமின் மேவித்தோணடீர்
எண்டோளர் முக்கண்ண ரெம்மீச
ரிறைவரினி தமருங்கோயில்
சேண்டாடு புனற்போன்னிச் செழுமணிகள்
வந்தலைக்குந் திருவையாறே. 10

அன்னமலி போழில்புடைசூ ழையாற்றெம்
பேருமானை யந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான
சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையா லிவைபத்து மிசையுங்கா
லீசனடி யேத்துவார்கள்
தன்னிசையோ டமருலகிற் றவநேறிசேன்
றெய்துவார் தாழாதன்றே, 11

திருச்சிற்றம்பலம்.

உ

# திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம்

## பண் — காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளோடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாம லையா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப்பாதங் கண்டறி யாதன கண்டேன். 1

போழிளங் கண்ணியி னானைப் பூந்துகி லாளோடும் பாடி
வாழியம் போற்றியென் றேத்தி வட்டமிட் டாடா வருவேன்
ஆழி வலவனின் றேத்து மையா றடைகின்ற போது
கோழி பெடையொடுங் கூடிக் குளிர்ந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 2

எரிப்பிறைக் கண்ணியி னானை யேந்திழை யாளோடும் பாடி
முரித்த விலயங்க ளிட்டு முகமலர்ந் தாடா வருவேன்
அரித்தொழு கும்வெள் ளருவி யையா றடைகின்ற போது
வரிக்குயில் பெடையோ டாடி வைகி வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 3

பிறையிளங் கண்ணியி னானைப் பெய்வளை யாளோடும் பாடித்
துறையிளம் பன்மலர் தூவித் தோளைக் குளிரத் தொழுவேன்
அறையிளம் பூங்குயி லாலு மையா றடைகின்ற போது
சிறையிளம் பெடையோ டாடிச் சேவல் வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 4

ஏடு மதிக்கண்ணி யானை யேந்திழை யாளோடும் பாடிக்
காடோடு நாடு மலையுங் கைதொழு தாடா வருவேன்
ஆடலமர்ந்துறை கின்ற வையா றடைகின்ற போது
பேடை மயிலோடுங் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 5

தண்மதிக் கண்ணியி னானைத் தையனல் லாளோடும் பாடி
உண்மெலி சிந்தைய னாகி யுணரா வுருகா வருவேன்
அண்ண லமர்ந்துறை கின்ற வையா றடைகின்ற போது
வண்ணப் பகன்றிலோ டாடி வைகி வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன் 6

கடிமதிக் கண்ணியி னானைக் காரிகை யாளோடும் பாடி
வடிவோடு வண்ண மிரண்டும் வாய்வேண் டுவசொல்லி [வாழ்வேன்
அடியிணை யார்க்குங் கழலா னையா றடைகின்ற போது
இடிகுர லன்னதோ ரேன மிசைந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 7

விரும்பு மதிக்கண்ணி யானை மெல்லிய லாளோடும் பாடிப்
பெரும்புலர் காலை யெழுந்து பெறுமலர் கொய்யா வருவேன்
அருங்கலம் பொன்மணி யுந்து மையா றடைகின்ற போது
கருங்கலை பேடையோ டாடிக் கலந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 8

முற்பிறைக் கண்ணியி னானை மொய்குழ லாளோடும் பாடிப்
பற்றிக் கயிறறுக் கில்லேன் பாடியு மாடா வருவேன்
அற்றருள் பெற்றுநின் றாரோ டையா றடைகின்ற போது
நற்றுணைப் பேடையோ டாடி நாரை வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 9

திங்கண் மதிக்கண்ணி யானைத் தேமொழி யாளோடும் பாடி
எங்கரு ணல்குங்கோ லெந்தை யெனக்கினியென்னுவருவேன்
அங்கிள மங்கைய ராடு மையா றடைகின்ற போது
பைங்கிளி பேடையோடாடிப் பறந்து வருவன **கண்டேன்**
**கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.** 10

**வளர்மதிக் கண்ணியி னானை வார்குழ லாளோடும் பாடிக்**
**களவு படாததோர் காலங் காண்பான் கடைக்கணிக் கின்றேன்**
**அளவு படாததோ ரன்போ டையா றடைகின்ற போது**
இளமண நாகு தழுவி ஏறு வருவன கண்டேன்
**கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 11**

திருச்சிற்றம்பலம்.

உ

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

**பண் — காந்தாரபஞ்சமம்**

திருச்சிற்றம்பலம்

பரவும் பரிசொன் றறியேனான்
பண்டே யும்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலு
மெய்த நினைய மாட்டேனான்
கரவி லருவி கமுகுண்ணத்
தேங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை
அரவந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 1

**எங்கே போவே னாயிடினு**
**மங்கே வந்தென் மனத்தீராய்ச்**
**சங்கை யொன்று மின்றியே**
**தலைநாள் கடைநா ளொக்கவே**

கங்கை சடைமேற் கரந்தானே
கலைமான் மறியுங் கனன்மழுவும்
தங்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய வடிகளோ. 2

மருவிப் பிரிய மாட்டேனான்
வழிநின் றொழிந்தே னொழிகிலேன்
பருவி விச்சி மலைச்சாரன்
பட்டை கொண்டு பகடாடிக்
குருவி யோப்பிக் கிளிகடிவார்
குழன்மேன் மாலை கொண்டோட்டம்
தரவந் திரைக்கா விரிகோட்டத்
தையா றுடைய அடிகளோ. 3

பழகா நின்று பணிசெய்வார்
பெற்ற பயனொன் றறிகிலேன்
இகழா துமக்காட் பட்டோர்க்கு
வேக படமொன் றரைசாத்தி
குழகா வாழைக் குலைத்தெங்கு
கொணர்ந்து கரைமே லெறியவே
அழகார் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய வடிகளோ. 4

பிழைத்த பிழையொன் றறியேனான்
பிழையைத் தீரப் பணியாயே
மழைக்கண் நல்லார் குடைந்தாட
மலையு நிலனுங் கொள்ளாமைக்
கழைக்கொள் பிரசங் கலந்தெங்குங்
கழனி மண்டிக் கையேறி
அழைக்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய வடிகளோ. 5

கார்க்கோள் கொன்றை சடைமேலொன்
றுடையாய் விடையாய் நகையினால்
மூர்க்கர் புரமூன் றெரிசெய்தாய்
முன்னீ பின்னீ முதல்வனீ
வார்க்கோ ளருவி பலவாரி
மணியு முத்தும் பொன்னுங்கொண்
டார்க்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 6

மலைக்கண் மடவா ளொருபாலாய்ப்
பற்றி யுலகம் பலிதேர்வாய்
சிலைக்கோள் கணையா லெயிலெய்த
செங்கண் விடையாய் தீர்த்தன்நீ
மலைக்கோ ளருவி பலவாரி
மணியு முத்தும் பொன்னுங்கொண்
டலைக்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 7

பொழு மதியம் புனக்கொன்றை
புனல்சேர் சென்னிப் புண்ணியா
சூழுமரவச் சுடர்ச்சோதீ
யுன்னைத் தொழுவார் துயர்போக
வாழு மவர்க ளங்கங்கே
வைத்த சிந்தை யுய்த்தாட்ட
ஆழுந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 8

கதிர்க்கோள் பசியை யொத்தேநான்
கண்டேனும்மைக் காணுதேன்
எதிர்த்து நீந்த மாட்டேனு
னெம்மான் றம்மான் றம்மானே
விதிர்த்து மேக மழைபொழிய
வெள்ளம் பரந்து நுரைசிதறி
அதிர்க்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 9

கூசி யடியா ரிருந்தாலுங்
குணமோன் றில்லீர் குறிப்பில்லீர்
தேச வேந்தன் திருமாலும்
மலர்மே லயனுங் காண்கிலாத்
தேசமெங்கும் தெளிந்தாடத்
தெண்ணீ ரருவி கொணர்ந்தெங்கும்
வாசந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 10

கூடி யடியா ரிருந்தாலுங்
குணமோன் றில்லீர் குறிப்பில்லீர்
ஊடி யிருந்து முணர்கிலே
னும்மைத் தொண்ட னூரனேன்
தேடி எங்குங் காண்கிலேன்
திருவா ரூரே சிந்திப்பன்
ஆடுந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய அடிகளோ. 11

திருச்சிற்றம்பலம்.

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது

## திருவாசகம்—அம்மானை

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை யெங்குஞ் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

## திருவெண்காட்டடிகள் அருளியது.

மண்ணுந் தணலாற வானும் புகையாற
எண்ணரிய தாயு மிளைப்பாறப் — பண்ணுமயன்
கையாற வும்மடியேன் காலாற வுங்கண்பார்
ஐயா! திருவையா ரு!

## ஐயடிகள் காடவர்கோன் நாயனர் அருளியது

### க்ஷேத்திரத் திருவெண்பா

குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நோந்திருமி யேங்கி நுரைத்தேறி — வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமு னேஞ்சமே!
ஐயாறு வாயா லழை.

உ

## திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

### அறுசீர்

தருவாய் அனந்தன் மீதுறங்கு
தண்ணம் புயநேத் திரனேனத்
துருவாய் அனந்த நாட்டரைகீண்
டுணராப் பதனே! பனைகளிற்சேங்
குருவாய் அனந்தம் பேட்டினேடு
குலவை யாரு! வருமறைசோற்
றிருவாய் அனந்த! நின்றேழும்பே
சிறியேன் சேய்யத் திருவருளே.

### எழுசீர்

அடைக்கலம் புகுந்து னடிதோழு திறைஞ்சி
யரகர வேன்றமாற் காழிப்
படைக்கலம் உதவு கருணையங் கடலே!
பகராறும் பழமறைப் போருளே!

புடைக்கலன் இலங்கும் அம்பிகை மகிழும்
புனிதனே ! மெய்யடி யவர்நெஞ்
சிடைக்கலந் தருளு மீசனே ! ஐயாற்
றிறைவனே ! யென்னையாள் பவனே !

அறுசீர்

சொல்லரிய பூரணமாய்த் திருவுருவா
யருவாய்ச்சித் சொரூப மாகிப்
புல்லறிவி னோர்க்கரிதா ஐம்பொறியான்
மதிமருட்டும் புலனை வென்ற
வல்லறிஞர் இதயமக லாவொளியாய்
ஐயாற்றுள் வயங்கு தேவே !
வெல்லரிய பவக்கடலிற் சுழலுமியான்
அடைவதென்றுன் விறற்பொற் ருளே.

கொச்சகக்கலிப்பா

என்றுமொளிர் திருவையாற் றிணையிலியே ! நால்வருக்கும்
அன்றுவட வாலநிழல் அமர்ந்தரிய நெறிகாட்டித்
துன்றுபரஞ் சுடர்க் கொழுந்தே ! சுகப்பொருளே !
[யென்னுளத்துள்
நின்றிருளைத் துறந்திடுதல் நினக்கரிதோ புகன்றிடுவாய்.

அறுசீர் (சந்தம்)

ஐயம் பாரினி லேற்றவன் பாற்கட லருந்தவ மகக்கீந்தோன்
ஐயம் பாரிய செங்கர னுருவழித் தருள்பவன் நன்னெஞ்சே
ஐயும் பாரிளம் பிறையணி திருவையா றனைத்தொழினமக்கில்லை
ஐயம் பாரியா ளொடுவிடை மீதுவந் தருள்வனற் கதிவாழ்வே,

கலிவிருத்தம்

நம்பாவுனை நம்பாது தினம்பாச கருடனே
வம்பார்குழல் வம்பார்முலை வம்பார்மொழி மடவார்

தம்பாலலே யாதுன்னரு டங்தேயெனே யாள்வாய்
அம்போருக மிகுதண்பணே வையாற்றிறை யவனே !

## கலிநிலேத்துறை

விமல பற்பல கவலேகோண் டிடருறு விணையேன்
முமல வேரறுத் தாளுநா ளென்றரோ ? மோழிவாய்
கமல வாவிநின் றேழுமிள வாளேபூங் கமுகோ
டமல மேகமுங் கிழிக்குமை யாற்றிறை யவனே !

## அறுசீர்

அருமறைப் போருளே யாரா வமுதமே மரைவி ரிஞ்சன்
திருமரு மார்பன் றேடுஞ் சேழுஞ்சுடர்ப் பிழம்பே யின்பக்
கருணேயங் கடலே நின்போற் கழலிணே வழுத்த நாயேன்
இருள்கேட வருளே யாற்றேம் மிறைவவைம் முகத்து வாழ்வே

## அறுசீர் (சந்தம்)

பரவரி யவனல் வடிவோடு மிளிறும் பருவ மதிற்கனலாம்
பரவரி யவனுந் தியின்வரு விதியும் பதமுடி யுந்துருவிப்
பரவரி யவனின் னடியவ ரடியான் பணியவு மேயருளம்
பரவரி யவனிக் கயிலேயைங் நதிவாழ் பரமத யாநிதியே,

## எழுசீர்

புனிதவை யாற்றுவளர் அண்ணனிணே யன்றியே
புகலிடம் பிறிது முளதோ !
தனியனேன் சேய்தபிழை யாவும்போ றுத்தாண்ட
சம்பு வேயக லாக்கோடுங்
துனிவுசேர் பிறவியா கியகடல் கடக்கநின்
றுணேயடிக் கலன ருளுவாய்
கனிவுமேய்ஞ் ஞானவடி யார்குழாங் தழைவுறக்
கருணேமழை போழியு முகிலே.

உ
சிவமயம்

# திருப்புகழ்

சோரியு மாமுகி லோஇரு ளோகுழல்
சுடர்கோள் வாளிணை யோபிணை யோவிழி
சுரர்த மாரமு தோகுயி லோமொழி இதழ்கோவை

துவர தோஇல வோதெரி யாவிடை
துகளி லாவன மோபிடி யோநடை
துணைகோள் மாமலை யோமுலைதானென உரையாடிப்

பரிவி னுலெனை யாளுக நானொரு
பழுதி லேனெனெ வாணுத லாரோடு
பகடி யேபடி யாவொழி யாவிடர் படுமாயப்

பரவை மீதழி யாவகை ஞானிகள்
பரவு நீள்புக ழேயது வாமிகு
பரம வீடது சேர்வது மாள்வதும் ஒருநாளே

கரிய மேனிய னுனிரை யாள்பவன்
அரிய ராவணை மேல்வளர் மாமுகில்
கனகன் மார்பது பீறிய வாளரி கனமாயக்

கபடன் மாமுடி யாறுட னுலுமோர்
கணையி னுல்நில மீதுற நூறிய
கருணை மால்கவி கோபக்ரு பாகரன் மருகோனே

திரிபு ராதிகள் தூளெழ வானவர்
திகழ வேமுனி யாவருள் கூர்பவர்
தெரிவை பாதியர் சாதியி லாதவர் தருசேயே

சிகர பூதரம் நீறுசெய் வேலவ
திமிர மோகர வீரதி வாகர
திருவை யாறுறை தேவக்ரு பாகர பெருமாளே,

—அருணகிரிநாதர்.

# திருவையாற்றுப் புராணம்

## செம்பொற் சோதியார்

ஞாலமுத லுதாந்த புவனத் துள்ளோர்
நல்லுயிர்க ளெல்லையறப் பிறந்து மாய்ந்து
மாலயனே முதலாய கடவுள் வர்க்கம்
வந்துவந்து வாரிமண லளவு மாயுங்
காலமொரு கணமாகப் புறங்கை யங்கை
காட்டுவான் போலெவையுங் காட்டி வீட்டிச்
சீலமுற விளையாடுஞ் செம்பொற் சோதித்
திருவையா றுடையானைச் சிந்தை செய்வாம்.

## பஞ்சநதேசுரர்

மெய்யாறு புடைபுரளத் திங்க ளோட
மேலோடப் பெரும்பாம்பு கிடந்து சீறக்
கையாறு காலேறிக் கீதம் பாடுங்
கடிகமழுந் திருமுடிமேற் கன்ன லாறு
நெய்யாறும் பாலாறும் பசுந்தே னாறு
நிறைபசுவின் றயிராறு நிறைய வாட்டி
யையாற ரையாற ரென்பார்க் கன்றோ
அவனியெலா மொருகுடைக்கீ ழாள லாமே,

## அறம்வளர்த்தநாயகி

வளங்கிளரு மண்டங்க ளனந்த கோடி
வாழுமுயி ரேழ்கடலின் மணலு மாற்ற
வுளங்குளிர வுய்ந்தோர்க்குந் தக்க தேயா
யுயிர்த்துணையில் லாவுயிர்க்குந் தக்க தேயாய்த்
தளர்ந்தொருவ ருண்டியால் வருந்தா வண்ணஞ்
சைவனு யகனையா றுடைய நாத
னளந்தபடி யிருநாழி நெல்லுங் கொண்டே
யறம்வளர்த்த வன்னைபதஞ் சென்னி வைப்பாம்.

வந்து வழிபாடுகள் செய்து வருவதில் சில முக்கியமான தலைவர்கள் :-

கனம் டி. எம். கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள், முன்னாள் திருவாங்கூர் உயர்நீதிமன்ற நீதிபதி.

,, சர். ஸி. பி. இராமசாமி அய்யர் அவர்கள், முன்னாள் திருவாங்கூர் திவான்.

,, வி. ஆர். கரந்த், முன்னாள் சென்னை அரசாங்க அமைச்சர்.

,, டி. சுந்தரராவ் நாயுடுகாரு, முன்னாள் சென்னை நகர மேயர்.

,, கே. சந்திரமௌலி, முன்னாள் சென்னை அரசாங்க மந்திரி.

,, பி. வி. ராஜமன்னார், சென்னை உயர்நீதிமன்ற பிரதம நீதிபதி

,, என். சோமசுந்தரம் பிள்ளை, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி.

,, எம். பக்தவத்சலம். சென்னை அரசாங்க அறநிலைய அமைச்சர்.

,, டி. கே. சங்கரவடிவேலுப் பிள்ளை, ஐ. ஏ. எஸ். முன்னாள் சென்னை அரசாங்கக் காரியதரிசி.

,, நாமக்கல் கவிஞர். வே. இராமலிங்கம் பிள்ளை.

,, டி. எல். வெங்கடராமய்யர், சுப்ரீம் கோர்ட் நீதிபதி, புது டில்லி.

,, வி. வி. கிரி, இப்பொழுது உத்தர பிரதேச கவர்னர்.

,, ஸ்ரீபிரகாசா, இப்பொழுது பம்பாய் கவர்னர்.

,, ஸி. சுப்பிரமணியம், சென்னை அரசாங்க பொருளாதார மந்திரி.

,, ஸி. குமாரசாமி, இலங்கை ஹைகமிஷனர்.

,, ஸி. ஏ. இராமகிருஷ்ணன் I. A. S., சென்னை அரசாங்கக் காரியதரிசி.

,, D. பாலசுந்தரம், இப்பொழுது சென்னை நகரசபை ஆணையர்.

,, P. ஆறுமுக முதலியார், இன்ஸ்பெக்டர் ஜெனரல் of ரிஜிஸ்ட்ரேஷன்.

,, கே. ஹனுமந்தையா, முன்னாள் மைசூர் இராஜ்ய முதலமைச்சர்.

,, ஓ. வி. அளகேசன், முன்னாள் இந்திய அரசாங்க ரெயில்வே உபமந்திரி.

,, நரசிம்மராவ், டைரக்டர் of போஸ்டல் சர்வீஸஸ்.

,, சுவாமி சுத்தாநந்தா, இராமகிருஷ்ண மடாலயம், சென்னை.

,, டி. கே. பழநியப்பன், கைத்தொழில் டைரக்டர், சென்னை.

,, மாதோரிலால் திரக்லால், பம்பாய்.

,, சின்மயாநந்தா, உத்தரகாசி மடம்.

,, W. S. கிருஷ்ணசாமி நாயுடுகாரு, முன்னாள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி.

,, பாபு இராசேந்திர பிரசாத், இந்திய ஜனாதிபதி.

,, மோடி, சென்னை கவர்னர்.

,, உத்தண்டராம பிள்ளை, ஐ. ஏ. எஸ். சென்னை அறநிலைய ஆணையர். மற்றும் பலரும்.

MADRAS
109941
Q23;38.21193-T4
N41—5

8B
4-104